**ஜூலை - 10**

**"எல்லோரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்." - லூக் 4 : 22**

கர்த்தரின் அடிச்சுவடுகளில் நடக்கிற எல்லோருக்கும் கூடுமானவரை இது உண்மையாயிருக்க வேண்டும். அவர்களுடைய பேச்சு கருணையுள்ளதாயும், மிதமாயும் இருக்க வேண்டும். இருதயத்திலிருந்து பொங்கி வழிகிறவைகள் சத்தியத்திற்காகவும் அதை நேசித்து நாடுகின்ற எல்லோருக்காகவும் அன்புகலந்த அனுதாபம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் எப்பொழுதும் சரியாய் விவேகம், நீதி இவைகளின் வரம்பிற்குள்ளும் கர்த்தரின் வார்த்தைக்கும் கண்டிப்பாக ஒத்த நிலையிலும் இருக்க வேண்டும். அவர்களுடைய விரோதிகளும்கூட அதிசயப்பட்டு, அவர்களும் யேசுவோடு இருந்து அவரிடத்தில் கற்றார்கள் என்று அவர்களைப் பற்றி அறிந்துகொள்ளத்தக்கதாக அவர்களுடைய பண்பும் நடத்தையும் ஜீவனுள்ள நிரூபங்களாக இவைகளோடு பொருந்த வேண்டும். **- Z ’99, 53 (R 2437)**

அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகள் இனிமையானவைகளாகவும், ஞானமுள்ளதாய் ஊடுருவுகிறதாயும், ஒப்புக்கொள்ளக் கூடியவைகளாகவும், உதவுகிறவைகளாகவும் இருந்தன. அவர் ஒரு பெரிய திறமையாகப் பேசுகிறவராகவும், ஒரு அறிவுறுத்தும் பேச்சாளராகவும், ஒரு மிகவும் பிரியமான போதகராகவும் இருந்தார் என்பதை இவைகள் நிரூபித்தன. இவைகள் சம்பந்தமாக அவருக்கிருந்த அசாதாரண திறமை கேட்போரின் ஆச்சரியத்தையும், வியப்பையும் தூண்டி, பொதுமக்களுக்கு நிகழ்த்தும் சொற்பொழிவில் அவருக்கிருந்த ஆதிபத்தியத்தை தாமாகவே ஒத்துக்கொள்ளச் செய்தது. அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை. **- P ’30, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 45:2; நீதி 15:23; பிர 10:12; ஏசா 50:4; மத் 7:28,29; 13:54; மாற் 1:22;6:2; லூக் 4:32,36; 21:38; நீதி 25:11; ரோம 15:4; யோவா 7:45,46; 13:31-17:26.**

**கோபுர வாசிப்பு : Z ’06, 185 (R 3795).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் எந்தப்பாகம் இந்த வாரத்தில் எனக்கு விசேஷமாகப் பயனுள்ளதாயிருந்தது? எந்தச் சந்தர்ப்பங்களில்?**